Logopädischer
Dienst Linthgebiet

## வேற்றுமொழி பெற்றோர்களிற்கான தகவல்களும் குறிப்புகளும்.

„சுற்றாடலில் டொச்மொழி பேசப்படுகின்ற போது தொடர்ந்தும் தாய்மொழியை பேச வேண்டுமா" என சிலசமயங்களில் நீங்கள் யோசிப்பதுண்டா?
உங்கள் பிள்ளை பாடசாலையில் டொச்மொழியை பேச வேண்டும் என்பதால் உங்கள் பிள்ளையுடன் டொச்மொழியில் உரையாடினால் நல்லது என கருதுகின்றீர்களா?
உங்கள் பிள்ளையை இரண்டாம் மொழியான டொச் பயில்வதை ஊக்குவிப்பதற்கு கீழ்வரும் நடவடிக்கைகள் உதவியாக அமையும்.

- **உங்கள் பிள்ளையுடன் தாய்மொழியில் உரையாடுங்கள்**
  குழந்தைகளுக்கு சரியான முறையில் ஊக்கம் கொடுக்கும் போது ஒரே சமயத்தில் அல்லது ஒன்றன் பின் ஒன்றாக அவர்களால் பலமொழிகளை கற்க முடியும். முதலில் உங்கள் பிள்ளையுடன் நீங்கள் தாய்மொழியில் பேசுவது முக்கியமாகும்.. இது உங்கள் பிள்ளைக்கு பிற மொழிகளை கற்பதற்கு முக்கிய அடித்தளமாக அமையும். உங்கள் பிள்ளைக்கு டொச்மொழியுடன் தொடர்பு ஏற்படும்போது நாளடைவில் பிள்ளை வீட்டிலும் டொச்சில் பேச தொடங்கும். இத்தகைய நிலமை சாதாரணமாகும். ஆனால் நீங்கள் தொடர்ந்தும் தளர்வடையாமல் உங்கள் தாய்மொழியில் பிள்ளையுடன் உரையாடுங்கள். அதனூடாக உங்கள் பிள்ளைக்கு தாய்மொழி அற்றுப்போகாது காப்பதுடன் பின்னாளில் பிள்ளைகளால் அதை பேசவும் முடியும்.

- **உங்கள் பிள்ளையை தாய்மொழி கற்பதற்கு ஊக்குவியுங்கள்**
  உங்கள் பிள்ளையுடன் விட்டு வேலைகளான சமையல் மற்றும் ஒழுங்குபேணலின் போது உரையாடுங்கள். உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து விளையாடுங்கள், பிள்ளையுடன் சேர்ந்து ஓவியநூல்களை பாருங்கள், உங்கள் பிள்ளைக்கு கதை சொல்லுங்கள். உங்கள் தாயகத்து சிறுவர் பாடல்களையும் சிறுவர் உரைநடைகளையும் அவர்களுக்கு சொல்லிக் கொடுங்கள். பிள்ளையுடன் சேர்ந்து ஏதாவது செய்யுங்கள் பின்னர் பார்த்தவற்றை பற்றி பிள்ளையுடன் கலந்துரையாடுங்கள். செவிமடுத்தலும் அனுபவத்தை பகிர்வதில் ஆர்வம் காட்டுவதும் மொழிவளர்ச்சிக்கு முக்கியமான காரணிகளாகும்.

- **உங்கள் பிள்ளைக்கு பாலர்பள்ளி தொடக்கத்திற்கு முன்னரே டொச்மொழிபேசும் பிள்ளைகளுடனான தொடர்பிற்கு வகை செய்யுங்கள்.**
  உங்கள் பிள்ளை சுற்றாடல் மொழியான டொச்சுடன் உதாரணத்திற்கு விளையாட்டு இடத்தில் (Spielplatz) அல்லது முன்பள்ளியில் (Spielgruppe) வேளையோடு தொடர்பை ஏற்படுத்தும் போது அதற்கு டொச்மொழியில் வளர்வதற்கு போதிய நேரம் கிடைக்கின்றது.. உங்கள் பிள்ளையின் நண்பர்களை வீட்டுக்கு அழையுங்கள், அதனூடாக உங்கள் பிள்ளைக்கு டொச்மொழியுடன் அனுபவங்களைப் பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இது பின்னர் பாலர்பாடசாலை மற்றும் பாடசாலை தொடக்கத்:திற்கு முக்கிய அடித்தளமாக அமையும்.

ஒரு பிள்ளை ஒரு மொழியில் - அது டொச்சாக இருக்க வேண்டும் என்பதில்லை – போதிய அடிப்படை அறிவை பெற்றிருப்பின் அது அதனது ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் என்பது இன்று நிரூபணம். யார் தனது வீட்டு மொழியில் உறுதியுணர்வும் மகிழ்வுத்தன்மையும் கொண்டிருக்கின்றனரோ அவர்கள் வேற்று மொழியிலும் தொடர்பாடலை ஏற்படுத்த அயராது முனைவர். ஒன்றுக்கு மேற்பட்ட மொழியை பேசுதல் அன்றாட வாழ்விற்கும் தொழில் முயற்சிக்கும் ஒரு பெரும் வரப்பிரசாதமாகும்.

பலமொழி தொடர்பு பேணலில் உங்கள் ஆர்வம் அதிகரிக்க வாழ்த்துகின்றோம்.
Linthgebiet பிரதேச பேச்சாற்றல் மேம்பாட்டு சேவையின் பேச்சுத்திறன் வளர்ப்புணர்கள்.

மூலம்: -


- Trierchi-Hermann, V.: Mehrsprachige Erziehung: Wie Sie Ihr Kind fördern. München: Reinhard Verlag 2003
- Flyer: www.ifp-bayern.de